# DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | | : | **S.C :264/2024** |
| Prosecution Witness | | | | : | **PW - 21** |
| Name | : | திரு.ராமச்சந்திரன் | Occupation | : | உதவி இயக்குநர், இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம், மாவட்ட காவல் அலுவலகம் |
| Father's Name/ Husband | : | துரைசாமி | | | |
| Village | : | | Age | : | 58 |
| Taluk | : | தஞ்சாவூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18th day of March 2025. 18-03-2025

(எதிரி காவலில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது உதவி இயக்குநராக, இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம், மாவட்ட காவல் அலுவலகதில் பணியாற்றுகிறேன். கடந்த 07.01.2015 அன்று தஞ்சாவூர் வட்டார தடய ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்த போது மாண்புமிகு நீதித்துறை நடுவர் கும்பகோணம் அவர்களிடமிருந்து 07/2015 என்ற அனுப்புகை எண் கொண்டு வேண்டுகோள் கடிதம் கிடைக்கப்பெற்றது. அக்கடிதத்தில் நாச்சியார் கோவில் காவல் நிலைய குற்ற எண். 374/2014 , 302 இதச வழக்கில் கைப்பற்றப்பட்ட கீழ்கண்ட தடயங்களை அப்போதைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ரவி என்பவர் மூலம் சரியான முத்திரைகளுடன் ஆய்வுக்கு அனுப்பி

வைத்திருப்பதாகவும், அவற்றை ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை அனுப்பி வைக்கும் படி கேட்கப்பட்டிருந்தது. தடய பொருட்களின் விவரம்.

1) தாவரப்பொருட்கள் மற்றும் கரும் பழுப்பு நிற கறைகளுடன் கூடிய பிசுபிசுப்பான மண் சிறிதளவு

2) தாவரப்பொருட்கள் மற்றும் தாவரப்பொருட்களுடன் கூடிய பிசுபிசுப்பான மண் சிறிதளவு

3) சிதைந்த நிலையில் உள்ள பருத்தியினால் ஆன முழுக்கை சட்டை ஒன்று, அதில சிவப்பு, மற்றும் நீல நிற குறுக்கு கோடுகளும் கரும் பழுப்பு நிற கறைகளும் காணப்பட்டன.

4) சிதைந்த நிலையல் கரும்ப பழுப்பு நிற ஜீன்ஸ் முழுக்கால் சட்டை ஒன்று அதில் கரும் பழுப்பு நிற கறைகள் காணப்பட்டன

5) சிதைந்த நிலையில் உள்ள கருப்பு நிற ஜட்டி ஒன்று அதில் கரும் பழுப்பு நிற கறைகள் காணப்பட்டன

6) துரு பிடித்த உலோகத்தால் ஆன 48.5 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்று அதில் கரும் பழுப்பு நிற கறைகள் காணப்பட்டன

இந்த தடயங்களை கடந்த 12.01.2015 அன்று அப்போதைய இணை இயக்குநர் திரு-ஜெயப்பிரகாஷ் அவர்கள் முன்னிலையில் ஆய்வு செய்ததில் தடய எண் 1 மற்றும் 3 முதல் 6 வரையுள்ள தடயங்களில் ரத்தம் கண்டறியப்பட்டது. மீதி தடயமான 2 ல் ரத்தம் கண்டறியப்படவில்லை. ரத்தம் கண்டறியப்பட்ட தடயங்களில் ரத்த மாதிரிகள்

எடுக்கக்கப்பட்டு அவற்றின் வகை, கண்டறிய சென்னையில் உள்ள தடய அறிவியல் துறையின் குருதி வடீநீரியல் பிரிவிற்கு அடுத்த கட்ட ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது. தடய எண். 1 மற்றும் 2 ல் உள்ள மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு அவை ஒரே இனம் தானா என்பதை கண்டறிய சென்னையில் உள்ள தடய அறிவியல் துறையின் வேதியியல் பிரிவிற்கு அடுத்த கட்ட ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பான ஆய்வறிக்கை மற்றும் ஆய்விற்கு பின் எஞ்சிய தடயங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. நீதிமன்றத்தில் இருந்து வந்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.24 ஆகும். அந்த ஆய்வறிக்கை அ.சா.ஆ.25 ஆகும். இந்த வழக்கின் தொடர்ச்சியாக கடந்த 28.01.2015 அன்று மேற்குறிப்பிட்ட நீதித்துறை நடுவர் அவர்களிடமிருந்து 103/2015 என்ற அனுப்புகை எண் கொண்ட மற்றொரு வேண்டு கோள் கடிதம் கிடைக்கப்பெற்றது அக்கடிதத்தில் இந்த வழக்கில் மறுபடி கைப்பற்றப்பட்ட கீழ்கண்ட தடயங்களை மேற்குறிப்பிட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் மூலம் ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் , அவற்றை ஆய்வு செய்து ஆய்வறிக்கை அனுப்ப கேட்கப்பட்டிருந்தது. தடய பொருட்களின் விவரம்,

1) 42 செ.மீ நீளமுள்ள அரிவாள் ஒன்று அதில் கரும் பழுப்பு நிற கறைகள் காணப்பட்டன

2) 38 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய குரோமியம் பூசப்பட்ட பூணுடன் கூடிய அரிவாள் ஒன்று அதில் கரும் பழுப்பு நிற கறைகள் காணப்பட்டன

இந்த தடயங்களை கடந்த 30.01.2015 அன்று அப்போதைய துணை இயக்குநர் திரு.ஜெயப்பிரகாஷ் முன்னிலையில் ஆய்வு செய்ததில் மேற்கண்ட 2 தடயங்களிலும்

ரத்தம் கண்டறியப்பட்டது. ரத்தம் கண்டறியப்பட்ட தடயங்களில் உள்ள ரத்த மாரிதிரிகள் எடுக்கப்பட்டு அவை எந்த இனம், மற்றும் வகை என்பதை கண்டறிய சென்னையில் உள்ள தடய அறிவியல் துறையின் வேதியியல் பிரிவிற்கு அடுத்த கட்ட ஆய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 103/2015 என்ற அனுப்புகை எண் கொண்ட வேண்டு கோள் கடிதம் அ.சா.ஆ. 26 ஆகும். ஆய்வறிக்கை அ.சா.ஆ.27 ஆகும்.